# TNPSC MODEL TEST-4

1. தண்டமிழ் ஆசான், சாத்தன் நன்னூற் புலவன் என்று சாத்தனாரைப் பாராட்டியவர் யார்?
   A) பாரதியார் B) பாரதிதாசன்
   C) இளங்கோவடிகள் D) திருத்தக்கதேவர்

2. "நெல்லும் உயிரன்றே" என்ற பாடலைப் பாடியவர்
   A) ஔவையார் B) கபிலர்
   C) பரணர் D) மோசிகீரனார்

3. விடை தேர்க.
   "பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ" - என்று பாராட்டப்பட்டவர்
   A) மாணிக்கவாசகர் B) சேக்கிழார்
   C) திருஞானசம்பந்தர் D) திருநாவுக்கரசர்

4. விடை தேர்க.
   பாலை நிலத்திற்குரிய பறவைகள்
   A) கிளி, மயில் B) நாரை, அன்னம்
   C) புறா, பருந்து D) கடற்காகம், குருகு

5. பண்புத் தொகைக்குப் பொருந்தாத சொல்லைக் கண்டறிக.
   A) ஆடுகொடி B) வட்டப்பலகை
   C) தண்ணீர் D) எண்கரம்

6. சந்திப்பிழை இல்லாத தொடரைத் தேர்ந்தெடு.
   A) எட்டுதொகையுள் பதிற்றுப்பத்துச் சுவடியும் ஒன்று
   B) எட்டுத்தொகையுள் பதிற்றுபத்து சுவடியும் ஒன்று
   C) எட்டுத்தொகையுள் பதிற்றுப்பத்துச் சுவடியும் ஒன்று
   D) எட்டுத்தொகையுள் பதிற்றுப்பத்து சுவடியும் ஒன்று

7. சந்திப்பிழை இல்லாத தொடரைக் காண்க.
   A) விடையை தேடிப்பார்க்கக் கடினமாக இருந்தது
   B) விடையைத் தேடிப்பார்க்கக் கடினமாக இருந்தது
   C) விடையைத் தேடிபார்க்கக் கடினமாக இருந்தது
   D) விடையைத் தேடிப்பார்க்க கடினமாக இருந்தது

8. சந்திப்பிழையைச் சரிபார்த்து எழுதுக.
   A) மருத்துவப்படிப்பிற்கு என்னைத் தேர்வு செய்தனர்
   B) மருத்துவபடிப்பிற்கு என்னைத் தேர்வு செய்தனர்
   C) மருத்துவப்படிப்பிற்கு என்னை தேர்வு செய்தனர்
   D) மருத்துவபடிப்பிற்கு என்னைத் தேர்வு செய்தனர்

9. மரபுப் பிழையற்றதை எடுத்து எழுதுக.
   A) பலா மூசு B) முற்றிய தேங்காய்
   C) அவரைப் பிஞ்சு D) முருங்கைப் பிஞ்சு

10. பொருத்துக.

| | |
|---|---|
| a) இடர் | 1. நிலவு |
| b) நாவாய் | 2. துன்பம் |
| c) இறை | 3. படகு |
| d) இந்து | 4. தலைவன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 1 |
| B) | 3 | 4 | 1 | 2 |
| C) | 4 | 3 | 2 | 1 |
| D) | 1 | 2 | 4 | 3 |

11. பொருந்தாச் சொல்லைக் கண்டறி.
    A) பஃறி B) திமில் C) புணரி D) வங்கம்

12. நெய்தல் திணைக்குரிய தொழில் எது?
    A) நெல்லரிதல், களை பறித்தல்
    B) ஏறுதழுவுதல், நிரை மேய்த்தல்
    C) தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல்
    D) மீன்பிடித்தல், உப்பு விளைத்தல்

13. கண்டறிதல்
    மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவ முயன்றவர்களுள் ஒருவர் யார் என்பதைக் கண்டறிக.
    A) பரிதிமாற்கலைஞர் B) ந.மு.வேங்கடசாமி நாட்டார்
    C) மறைமலையடிகள் D) திரு.வி.க.

14. பொருத்துக.

| *நூல்கள்* | *ஆசிரியர்* |
|---|---|
| a) முருகன் பிள்ளைத்தமிழ் | 1. மறைமலையடிகள் |
| b) பழையதும் புதியதும் | 2. ந.மு. வேங்கடசாமி நாட்டார் |
| c) கண்ணகி வரலாறு | 3. மீனாட்சி சுந்தரம் பிள்ளை |
| d) பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை | 4. உ.வே. சாமிநாதையர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 2 | 3 | 4 | 1 |
| C) | 3 | 4 | 2 | 1 |
| D) | 4 | 3 | 1 | 2 |

15. கண்டறிதல்
    மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் தமிழ் பயின்றவர்
    A) பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்
    B) திரு.வி.க.
    C) மறைமலையடிகள்
    D) உ.வே. சாமிநாதையர்

We Shine Academy TM

16. கண்டறிக.
முதல் மாந்தன் (மனிதன்) தோன்றிய இடத்தைக் கண்டறிக.
A) ஆஸ்திரேலியா கண்டம் B) ஆப்பிரிக்கா கண்டம்
C) லெமூரியா (குமரி) கண்டம் D) ஐரோப்பாக் கண்டம்

17. கண்டறிக
"தொன்மைதானே உரையொடு புணர்ந்த பழமை மேற்றே"
தொடர் இடம் பெற்றுள்ள நூல் எது எனக் கண்டறிக.
A) நன்னூல் B) இலக்கண விளக்கம்
C) தொல்காப்பியம் D) தொன்னூல் விளக்கம்

18. மரபுப் பிழையற்ற தொடரைக் காண்க.
A) தென்னை ஓலையும் வேப்ப ஓலையும் கொண்டு வந்தான்
B) தென்னை இலையும் வேப்பந்தழையும் கொண்டு வந்தான்
C) தென்னங்கீற்றும் வேப்ப ஓலையும் கொண்டு வந்தான்
D) தென்னங்கீற்றும் வேப்பந்தழையும் கொண்டு வந்தான்

19. மரபுப்பிழை இல்லாத தொடர் எது?
A) பூந்தோப்பு B) மாஞ்சோலை
C) கம்பங்கொல்லை D) பனந்தோட்டம்

20. ஒருமை பன்மை பிழையை நீக்குக.
A) புலிகள் இரண்டும் வருகின்றது
B) நானும் அவனும் வந்தோம்
C) மயில்கள் அகவுகிறது
D) மேற்கூறிய எதுவும் இல்லை

21. ஒருமை பன்மை பிழை நீக்குக.
A) அதுகள் இங்கே உள
B) அதுகள் இங்கே உள்ளன
C) அவை இங்கே உள்ளன
D) அதுகள் இங்கே உள்ளது

22. ஒருமை பன்மை பிழை இல்லாத தொடர் எது?
A) துள்ளுகிற மாடு பொதி சுமக்காதவை
B) துள்ளுகிற மாடு பொதி சுமக்காது
C) துள்ளுகிற மாடுகள் பொதி சுமக்காது
D) இவற்றுள் எதுவுமில்லை

23. "ஒரு பொருட் பன்மொழி" இல்லாத சொல் எது?
A) வல்விரைந்து B) பரிசு பாராட்டு
C) நடுமையம் D) மீமிசை

24. பொருத்துக :
a) Mould 1. உதிர்
b) Moult 2. மண்மேடு
c) Mound 3. குன்று
d) Mount 4. அச்சு

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 2 | 1 |
| B) | 4 | 1 | 2 | 3 |
| C) | 2 | 4 | 3 | 1 |
| D) | 4 | 1 | 3 | 2 |

25. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.

| | *கரை* | | *கறை* |
|---|---|---|---|
| A) | மாசு | - | எல்லை |
| B) | விளிம்பு | - | கரைதல் |
| C) | கருமை | - | இருள் |
| D) | எல்லை | - | மாசு |

26. "இன்பம் விழையான் இடும்பை இயல் பென்பான்
துன்பம் உறுதல் இலன்"
மேற்காண் பாடலடிகளில் பொருந்தியுள்ளபடி மிகச் சரியான விடை எது?
A) அடி மோனைத் தொடை B) இயைபுத் தொடை
C) அடிமுரண் தொடை D) அளபெடைத் தொடை

27. பொருத்துக :
a) Ridge 1. நீக்கு
b) Rid 2. பிளவு
c) Rife 3. உச்சி
d) Rift 4. நிறைந்து

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 3 | 1 | 2 | 4 |
| B) | 2 | 3 | 1 | 4 |
| C) | 3 | 1 | 4 | 2 |
| D) | 1 | 4 | 3 | 2 |

28. உவமைக்கு ஏற்ற பொருத்தமான பொருளை தேர்ந்தெடுத்து எழுதுக.
"உள்ளங்கை நெல்லிக்கனி போல"
A) அரிதல் B) புரிதல்
C) களைதல் D) தெளிதல்

29. "நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று"
இக்குறளில் நன்றி - நன்றன்று - நன்றல்லது என்பது
A) பொழிப்பு எதுகை B) கூழை எதுகை
C) இணை எதுகை D) மேற்கதுவாய் எதுகை

30. உவமைக்கு ஏற்ற பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
"இலவு காத்த கிளி போல"
A) பதற்றம் B) ஏற்றம்
C) தடுமாற்றம் D) ஏமாற்றம்

31. தன்வினை வாக்கியத்தைக் கண்டறிக.
A) செழியன் ஊஞ்சல் ஆடுகிறான்
B) செழியன் ஊஞ்சலை ஆட்டுகின்றான்
C) செழியன் ஊஞ்சல் ஆடான்
D) ஊஞ்சல் செழியனால் ஆட்டப்பட்டது

32. வாக்கிய அமைப்பினைக் கண்டறிதல்
'இனியன் உண்ணா நின்றான்'
எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக.
A) செய்தி வாக்கியம்
B) உணர்ச்சி வாக்கியம்
C) உடன்பாட்டு வாக்கியம்
D) எதிர்மறை வாக்கியம்

We Shine Academy™

33. வாக்கிய அமைப்பினைக் கண்டறிதல்.
கபிலரும் பரணரும் பாடிய பாடல்கள் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளன.
A) கலவை வாக்கியம் B) செய்தி வாக்கியம்
C) தனி வாக்கியம் D) தொடர் வாக்கியம்

34. ஈன் குழவி - என்பதன் இலக்கணக் குறிப்பு தருக.
A) உவமைத்தொகை B) பண்புத்தொகை
C) வினைத்தொகை D) உம்மைத்தொகை

35. பொருத்துக :

| *இசைநூல்கள்* | *காலம்* |
|---|---|
| a) பரிபாடல் | 1. இரண்டாம் நூற்றாண்டு |
| b) சிலப்பதிகாரம் | 2. கி.மு. 500 முதல் கி.பி. 300 வரை |
| c) தேவாரம் | 3. 18ஆம் நூற்றாண்டு |
| d) இராமநாடகக் கீர்த்தனை | 4. 7ஆம் நூற்றாண்டு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 2 | 1 |
| B) | 1 | 2 | 3 | 4 |
| C) | 2 | 1 | 4 | 3 |
| D) | 3 | 2 | 1 | 3 |

36. பொருத்துக :

| *பட்டியல் I* | *பட்டியல் II* |
|---|---|
| a) அம்பி | 1. இருள் |
| b) துடி | 2. படகு |
| c) திரை | 3. பறை |
| d) அல் | 4. அலை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 1 |
| B) | 3 | 2 | 4 | 1 |
| C) | 2 | 3 | 1 | 4 |
| D) | 2 | 1 | 3 | 4 |

37. பொருத்துக :

| *சொல்* | *பொருள்* |
|---|---|
| a) செறு | 1. பவளம் |
| b) சந்தம் | 2. புதுவருவாய் |
| c) யாணர் | 3. அழகு |
| d) துகிர் | 4. வயல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 2 | 4 | 3 | 1 |
| B) | 4 | 3 | 2 | 1 |
| C) | 1 | 2 | 3 | 4 |
| D) | 3 | 4 | 2 | 1 |

38. சரியான தொடரை பூர்த்தி செய்க.
உடையார் முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார் ..........
A) புண் உடையார் கல்லாதவர் B) கடையரே கல்லாதவர்
C) சாந்துணையும் கல்லாதவாறு D) காமுறுவர் கற்றறிந்தார்

39. தொடரை நூலுடன் பொருத்துக.

| *தொடர்கள்* | *நூல்கள்* |
|---|---|
| a) ஆற்றுணா வேண்டுவது இல் | 1. நாலடியார் |
| b) நாய்கால் சிறுவிரல் போல் | 2. திருக்குறள் |
| c) மணக்கு விளக்கம் மடவாள் | 3. பழமொழி |
| d) அன்பின் வழியது உயிர்நிலை | 4. நான்மணிக்கடிகை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 3 | 1 | 2 | 4 |
| B) | 4 | 2 | 3 | 1 |
| C) | 3 | 1 | 4 | 2 |
| D) | 2 | 1 | 4 | 3 |

40. சரியான வரிசையைக் குறிப்பிடுக.
A) காப்பு, செங்கீரை, சப்பாணி, தால், முத்தம்
B) காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம்
C) காப்பு, செங்கீரை, தால், முத்தம், சப்பாணி
D) காப்பு, தால், செங்கீரை, முத்தம், சப்பாணி

41. பொருத்துக :

| *கவிஞர்* | *பட்டப்பெயர்கள்* |
|---|---|
| a) மருதகாசி | 1. பாவலர் மணி |
| b) வாணிதாசன் | 2. கவியரசு |
| c) சுரதா | 3. திரைக்கவித்திலகம் |
| d) முடியரசன் | 4. கலைமாமணி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 2 | 1 | 3 | 4 |
| C) | 3 | 1 | 4 | 2 |
| D) | 4 | 3 | 2 | 1 |

42. பொருத்துக :

| *கடிதம்* | *ஆசிரியர்* |
|---|---|
| a) இந்த நாட்டில் சொன்னபடி செய்ய ஆள் இல்லை. ஆனால் கண்டபடி சொல்ல ஆள் ஏராளம் | 1. ஆனந்தரங்கர் நாட்குறிப்பு |
| b) துறைமுக நகரங்களில் வாழும் மக்களின் வருவாய்க்கு அடிப் படையாய் அமைவது அங்கு வரும் கப்பல்களின் போக்குவரத்து | 2. மு.வ. தம்பிக்கு எழுதிய கடிதம் |
| c) அகிம்சா தருமத்தை அதன் எல்லா அம்சங்களிலும் நான் உணர்ந்த பின்னரே சந்தேகத்தின் புரை என்னை விட்டு ஒழிந்தது | 3. அண்ணா |
| d) போர் என்றால் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு கெடாத அறப்போர் | 4. காந்தியடிகள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 4 | 1 | 2 | 3 |
| C) | 2 | 1 | 4 | 3 |
| D) | 3 | 2 | 1 | 4 |

43. பொருத்துக :
சிறப்புப் பெயர்களை ஆசிரியர்களோடு பொருத்துக.

| *சிறப்புப் பெயர்* | *ஆசிரியர்* |
|---|---|
| a) தேசியக் கவிஞர் | 1. தேசிக விநாயகம் பிள்ளை |
| b) புரட்சிக் கவிஞர் | 2. நாமக்கல் கவிஞர் |
| c) காந்தியக் கவிஞர் | 3. பாரதியார் |
| d) கவிமணி | 4. பாரதிதாசன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 3 | 4 | 2 | 1 |
| B) | 4 | 3 | 2 | 1 |
| C) | 1 | 2 | 3 | 4 |
| D) | 2 | 3 | 1 | 4 |

We Shine Academy ™

44. பொருத்துக :

| கவிஞர் | இயற்பெயர் |
|---|---|
| a) முடியரசன் | 1. முத்தையா |
| b) சுரதா | 2. துரைராசு |
| c) கண்ணதாசன் | 3. எத்திராசலு |
| d) வாணிதாசன் | 4. இராசகோபாலன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 2 | 1 |
| B) | 2 | 4 | 1 | 3 |
| C) | 3 | 4 | 1 | 2 |
| D) | 1 | 2 | 3 | 4 |

45. பொருத்துக :
கவிதைகளை நூலாசிரியர்களோடு பொருத்துக:

| கவிதை | ஆசிரியர் |
|---|---|
| a) "வாழ்க்கையும் காவிரி அதிலெங்கும் கிளிக்கூண்டு" | 1. சாலை இளந்திரையன் |
| b) "சீக்கிரம் செல்லுக நேர்வழியில் அதைச் செத்தைகள் கூடியே தூர்க்குமுன்னே" | 2. ந. பிச்சமூர்த்தி |
| c) "கன்று குரல் கேட்ட பசுபோல மாற்றார் கதறுவதைக் கேட்டவுடன் அன்பு செய்தால்" | 3. அப்துல் ரகுமான் |
| d) "யாருடைய வெளிச்சத்திற்காகவோ இவர்களே தீக்குச்சிகளாகி விட்டார்களே" | 4. ஆலந்தூர் மோகனரங்கன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 2 | 1 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 2 | 1 | 3 | 4 |
| D) | 3 | 4 | 1 | 2 |

46. சரியான ஆசிரியரைக் குறிப்பிடுக.
"கோனோக்கி வாழும் குடிபோன் றிருந்தேனே"
A) தொண்டரடிப் பொடியாழ்வார் B) பொய்கையாழ்வார்
C) குலசேகர ஆழ்வார் D) மதுரகவி ஆழ்வார்

47. சரியான வைப்பு முறையைக் குறிப்பிடுக.
A) பேதை, பெதும்பை, மடந்தை, மங்கை
B) பேதை, மங்கை, பெதும்பை, மடந்தை
C) பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை
D) பேதை, மங்கை, மடந்தை, பெதும்பை

48. ஆண்டாள் கூறாத தொடர் எது?
A) மானிடவர்க்கென்று பேச்சுப் படில் வாழ்கில்லேன்
B) ஆழிமழைக் கண்ணா ஒன்று நீ கைகரவேல்
C) வெள்ளி எழுந்து வியாழன் உறங்கிற்று
D) வானாளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்

49. உலகம், உயிர், கடவுள் ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியம் பெரிய புராணம் என்று குறிப்பிட்டவர்
A) சேக்கிழார் B) திரு.வி.க.
C) பரஞ்சோதிமுனிவர் D) நாமக்கல் கவிஞர்

50. "திகழ்பா ஒரு நான்குஞ் செய்யுள் வரம்பாகப்" தமிழ் விடு தூது குறிப்பிடும் நான்கு வரப்புகள் யாவை?
A) மனம், புத்தி, சித்தம், அகங்காரம்
B) வைதருப்பம், கௌடம், பாஞ்சாலம், மாகதம்
C) வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா
D) அறம், பொருள், இன்பம், வீடு

51. பொருத்துக :

| செய்திகள் | ஆசிரியர் |
|---|---|
| a) நாட்குறிப்பு ஓர் இலக்கியமாகவும் ஆவணமாகவும் மதிக்கப் பெறுகிறது | 1. அறிஞர் அண்ணா |
| b) பல சிக்கலான தமிழ்நாட்டுப் பிரச்சினைகளை எழுதியுள்ளார் | 2. ஆனந்தரங்கர் |
| c) உண்மையில் சுயசரிதை எழுதுவதல்ல என் நோக்கம் சத்திய சோதனைகள் பலவற்றின் கதையைக் கூற விரும்புகிறேன் | 3. மு.வ. |
| d) நீ யாருடனும் தமிழிலேயே பேசு, உலகத்தார் எல்லாம் அவரவர் தாய் மொழியில் தான் பேசுகின்றனர் | 4. டி. காந்தி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 2 | 1 | 4 | 3 |
| B) | 2 | 3 | 4 | 1 |
| C) | 3 | 4 | 1 | 2 |
| D) | 1 | 3 | 2 | 4 |

52. பொருத்துக :

| நூலாசிரியர் | நூல் |
|---|---|
| a) சாலை இளந்திரையன் | 1. இமயம் எங்கள் காலடியில் |
| b) சிற்பி | 2. நேயர் விருப்பம் |
| c) ஆலந்தூர் மோகனரங்கன் | 3. சிரித்த முத்துக்கள் |
| d) அப்துல் ரகுமான் | 4. புரட்சி முழக்கம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 1 | 2 |
| B) | 3 | 4 | 2 | 1 |
| C) | 2 | 1 | 3 | 4 |
| D) | 1 | 2 | 3 | 4 |

53. பொருத்துக :

| கருத்து | ஆசிரியர் |
|---|---|
| a) புதுக்கவிதையின் மறுபிறப்புக்கு வித்திட்டவர் | 1. சுந்தர ராமசாமி |
| b) புதுக்கவிதை செழுமையுறக் காரணமாக இருந்தவர் | 2. மணி |
| c) புதுக்கவிதை வரலாற்றில் ஒரு துருவ நட்சத்திரம் | 3. அ.ந. பிச்சமூர்த்தி |
| d) யாப்பறிந்து யாப்புடைத்த புதுக்கவிஞர் | 4. சி.சு. செல்லப்பா |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 4 | 1 | 3 | 2 |
| B) | 1 | 2 | 3 | 4 |
| C) | 3 | 4 | 1 | 2 |
| D) | 2 | 1 | 4 | 3 |

54. "துவ்வா விடமும் அமுதாகும்"
அடிகோடிட்ட சொல்லின் இலக்கணம் யாது?
A) குறிப்புப் பெயரெச்சம் B) குறிப்பு வினையெச்சம்
C) எதிர்மறைப் பெயரெச்சம் D) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

We Shine Academy TM

55. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல்
A) மகடூஉ வோடில்லை முந்நீர் வழக்கம்
B) வோடில்லை முந்நீர் வழக்கம் மகடூஉ
C) வழக்கம் மகடூஉ வோடில்லை முந்நீர்
D) முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை

56. ஒட்டம் என்பது எவ்வகைப் பெயர்ச்சொல்
A) இடம் B) பொருள் C) பண்பு D) தொழில்

57. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல்
A) உயர்வை உணர்த்தும் உழைப்பு பெருநாள்
B) பெருநாள் உழைப்பின் உயர்வை உணர்த்தும்
C) உணர்த்தும் பெருநாள் உழைப்பின் உயர்வை
D) உழைப்பின் உயர்வை உணர்த்தும் பெருநாள்

58. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.
A) தௌலம், சௌனாம்பரம், ஔடதம், கௌரியம்
B) சௌனாம்பரம், கௌரியம், ஔடதம், தௌலம்
C) ஔடதம், கௌரியம், சௌனாம்பரம், தௌலம்
D) ஔடதம், கௌரியம், தௌலம், சௌனாம்பரம்

59. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.
A) திறம், துருவல், தேறல், தெறுழ்
B) தேறல், தெறுழ், துருவல், திறம்
C) துருவல், திறம், தேறல் தெறுழ்
D) திறம், துருவல், தெறுழ், தேறல்

60. ‘அறை’ என்னும் வேர்ச் சொல்லின் வினையெச்சம் எழுதுக.
A) அறை B) அறைதல்
C) அறைந்து D) அறைந்தவன்

61. பொருத்துக.
பட்டியல் Iல் உள்ள தொடரை பட்டியல் IIல் பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடு களைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.

| *பட்டியல் I* | *பட்டியல் II* |
|---|---|
| a) காயும் நவிச்சுடர் | 1. அரிச்சுவடி |
| b) விரிகடல் | 2. வாழும் வீடு |
| c) கட்டுமரம் | 3. கூரை |
| d) பின்னல் வலை | 4. பள்ளிக்கூடம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 3 | 4 | 2 | 1 |
| B) | 1 | 2 | 3 | 4 |
| C) | 4 | 3 | 2 | 1 |
| D) | 2 | 1 | 4 | 3 |

62. சரியான பொருள் எழுதுக.
“அண்ணனிடம் விடைபெற்று விதுரன் சென்றான்
அடவிமலை யாறெல்லாம் கடந்து போகி”
அடவி - பொருள் குறிப்பிடுக.
A) மலை B) ஆறு
C) காடு D) சமவெளி

63. பொருத்துக :

| *நிலம்* | *பாடியோர்* |
|---|---|
| a) குறிஞ்சி | 1. பேயனார் |
| b) முல்லை | 2. ஓரம்போகியார் |
| c) மருதம் | 3. அம்மூவனார் |
| d) நெய்தல் | 4. கபிலர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 4 | 1 | 2 | 3 |
| B) | 4 | 2 | 1 | 3 |
| C) | 1 | 3 | 2 | 4 |
| D) | 1 | 2 | 3 | 4 |

64. “மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே”
மன்னன் வாயில் தெறித்த மணி எது?
A) முத்து B) பவளம்
C) மாணிக்கம் D) கோமேதகம்

65. ........... என்ற வள்ளல் உதவியால் சீறாப்புராணம் நிறைவுற்றது.
A) சீதக்காதி வள்ளல் B) சடையப்ப வள்ளல்
C) அபுல்காசிம் D) சந்திரன்சுவர்க்கி

66. “உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே”
இப்பாடல் வரி எந்நூலில் உள்ளது?
A) தமிழ் மறை B) தமிழ் மூவாயிரம்
C) தேவாரம் D) திருவாசகம்

67. கோடிட்ட இடத்தை பூர்த்தி செய்க.
முத்தொள்ளாயிரம் முழுமையாகக் கிடைக்கவில்லை புறத்திரட்டு என்னும் நூல் வாயிலாக ........... பழைய உரைநூல்களில் மேற்கோள்களாக ......... வெண்பாக்கள் கிடைத்துள்ளன.
A) 108, 21 B) 107, 21
C) 108, 22 D) 106, 20

68. பட்டியல் Iல் உள்ள தொடர்களை பட்டியல் IIல் உள்ள அடியவர்களுடன் பொருத்தி கீழே கொடுக்கப் பட்டுள்ள தொடரைக் குறிப்பிடுக.

| *தொடர்* | *அடியவர்* |
|---|---|
| a) அழுது அடியடைந்த அன்பர் | 1. சுந்தரர் |
| b) நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் | 2. திருநாவுக்கரசர் |
| c) என்கடன் பணி செய்து கிடப்பதே | 3. மாணிக்கவாசகர் |
| d) ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் | 4. திருஞானசம்பந்தர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 1 |
| B) | 3 | 4 | 2 | 1 |
| C) | 4 | 3 | 2 | 1 |
| D) | 2 | 3 | 1 | 4 |

69. பின்வரும் இலக்கணக் குறிப்புக்குப் பொருந்தாத சொல்லைத் தேர்க.
A) பொங்குகடல் B) செய்வினை
C) தேன்குடி D) வருபுனல்

We Shine Academy ™

70. பின்வரும் இலக்கணக் குறிப்புக்குப் பொருந்தாத சொல்லைக் கண்டறிக.
"உரிச்சொற்றொடர்"
A) புன்கண்  B) மல்லல்
C) நனிகடிது  D) தடக்கை

71. விடை தேர்க.
"முத்தமிழ்" எனும் சொல்லின் இலக்கணக் குறிப்பு யாது?
A) வினைத்தொகை  B) பண்புத்தொகை
C) உவமைத்தொகை  D) உம்மைத்தொகை

72. பெரியபுராணத்தில் மூத்த திருநாவுக்கரசு வாழைக் குருத்து அரியும் போது பாம்பு .......... தீண்டியது
A) உள்ளங்காலில்  B) உள்ளங் கையில்
C) புறங்கையில்  D) புறங்காலில்

73. பொருத்துக :

| சொல் | பொருள் |
|---|---|
| a) நாமம் | 1. பன்றி |
| b) ஓதி | 2. மலை |
| c) வெற்பு | 3. கூந்தல் |
| d) கேழல் | 4. பெயர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 2 | 1 |
| B) | 1 | 2 | 3 | 4 |
| C) | 3 | 4 | 2 | 1 |
| D) | 2 | 1 | 4 | 3 |

74. பொருத்துக :

| சொல் | பொருள் |
|---|---|
| a) மிடிமை | 1. திருமணம் |
| b) உரவு | 2. வயது |
| c) வதுவை | 3. வறுமை |
| d) அகவை | 4. வலிமை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 3 | 4 | 1 | 2 |
| D) | 3 | 4 | 2 | 1 |

75. பொருத்துக :

| சொல் | பொருள் |
|---|---|
| a) சிலை | 1. கவலை |
| b) பையுள் | 2. வில் |
| c) பீடு | 3. வெற்றி |
| d) விறல் | 4. பெருமை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 2 | 1 | 3 | 4 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 3 | 4 | 1 | 2 |
| D) | 4 | 3 | 2 | 1 |

76. பொருத்துக :

| நூல் | நூலாசிரியர் |
|---|---|
| a) மூவருலா | 1. கம்பர் |
| b) கலிங்கத்துப்பரணி | 2. ஒட்டக்கூத்தர் |
| c) சிலை எழுபது | 3. புகழேந்தி |
| d) நளவெண்பா | 4. செயங்கொண்டார் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 2 | 1 | 4 | 3 |
| B) | 2 | 4 | 1 | 3 |
| C) | 1 | 2 | 3 | 4 |
| D) | 4 | 3 | 2 | 1 |

77. தொடரும் - தொடர்பும்

| தொடர் | சான்றோர் |
|---|---|
| a) உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே | 1. திருமூலர் |
| b) உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே | 2. பாரதிதாசன் |
| c) தேனிலே ஊறிய செந்தமிழின் சுவைதேறும் சிலப்பதிகாரம் | 3. திருவள்ளுவர் |
| d) உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் | 4. கவிமணி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 2 | 1 | 4 | 3 |
| B) | 1 | 2 | 3 | 4 |
| C) | 3 | 4 | 2 | 1 |
| D) | 4 | 3 | 1 | 2 |

78. பொருத்துக :

| ஆசிரியர் | நூல் |
|---|---|
| a) வ.வே.சு. ஐயர் | 1. கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் |
| b) புதுமைப்பித்தன் | 2. மங்கையர்க்கரசியின் காதல் |
| c) கு.ப. ராஜகோபாலன் | 3. குறிஞ்சித்தேன் |
| d) ராஜம் கிருஷ்ணன் | 4. விடியுமா |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 3 | 1 | 2 | 4 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 4 | 3 | 2 | 1 |
| D) | 2 | 3 | 4 | 1 |

79. பொருத்துக :

| கரு | ஆசிரியர் |
|---|---|
| a) சமுதாய முன்னேற்றம் | 1. கு.ப. ராஜகோபாலன் |
| b) குடும்ப வாழ்க்கையின் இன்ப துன்பங்களைக் கூறுவன | 2. ராஜாஜி |
| c) வலுவான கொள்கைகள் | 3. ரகுநாதன் |
| d) புரட்சியான கருத்துக்கள் | 4. சுந்தர ராமசாமி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 2 | 1 |
| B) | 3 | 2 | 1 | 4 |
| C) | 1 | 2 | 3 | 4 |
| D) | 2 | 1 | 4 | 3 |

We Shine Academy™

80. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.
பல்லவர் காலத்து ஓவியங்கள் அல்லாததைக் கண்டறிக.
A) மாமல்லபுரம்
B) மாமண்டூர்
C) தஞ்சைப் பெரிய கோயில்
D) காஞ்சி கைலாசநாதர் கோயில்

81. பொருந்தாத நூலைக் கண்டறிக.
புதுமைப்பித்தனால் எழுதப்படாத நூல் எது எனக் கண்டறிக.
A) சாபவிமோசனம் B) முள்ளும் ரோஜாவும்
C) பொன்னகரம் D) கல்யாணி

82. பொருத்துக :

| *சிற்பம்* | *காலம்* |
|---|---|
| a) கடவுளர்களின் திருவுருவங்கள் | 1. 2ஆம் நூற்றாண்டு |
| b) இராமாயண சிவபுராணக் காட்சிகள் | 2. பல்லவர் காலம் |
| c) கண்ணகி சிலை, கொல்லிப் பாவை | 3. விஜயநகர நாயக்கர் காலம் |
| d) மனிதர்களின் உடற் கூறுகள் | 4. சோழர்காலம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 2 | 4 | 1 | 3 |
| C) | 3 | 2 | 1 | 4 |
| D) | 4 | 3 | 2 | 1 |

83. பிரித்து எழுதுக.
நாற்கரணம்
A) நால் + காரணம் B) நான்கு + கரணம்
C) நாற்கு + கரணம் D) நாள் + கரணம்

84. சந்திப் பிழை அற்ற வாக்கியங்களைக் கண்டறிக.
1. கயிற்றுக் கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்
2. கயிறு கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்
3. மேடைப் பேச்சு மிகுந்த பயனைத் தரவல்லது
4. மேடை பேச்சு மிகுந்த பயனைத் தரவல்லது
A) 1 மற்றும் 3 B) 2 மற்றும் 3
C) 3 மற்றும் 4 D) 1 மற்றும் 4

85. வழுவற்ற தொடர் எது?
A) பனை இலையால் கூரை போட்டனர்
B) பனை ஓலையால் கூரை வேய்ந்தனர்
C) பனை இலையால் கூரை கட்டினர்
D) பனை ஓலையால் கூரை முடுக்கினர்

86. கீழ்க் காணும் விடைகளில் எது சரியானது?
A) ஈ - கொடு
B) ஆ - எருது
C) கோ - கோபுரம்
D) சே - செய்

87. ஒலி வேறுபாடு அறிந்து சரியான பொருளை எழுதுக.

| | கலை | | களை |
|---|---|---|---|
| A) | கலைத்தல் | - | களைத்தல் |
| B) | நுண்கலை | - | மனபாரம் |
| C) | ஆடை | - | நீக்குதல் |
| D) | சிலை | - | மகிழ்ச்சி |

88. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.
"சோகம் தராதவன் அசோகன்" என்று கூறியவர்
A) சிற்பி பாலசுப்பிரமணியம் B) சுரதா
C) வாணிதாசன் D) பாரதிதாசன்

89. கண்டறிக.
ஆடல் மகளின் ஓவியம் எங்குள்ளது என்பதைக் கண்டறிக.
A) திருவரங்கம் B) மதுரை
C) பனமலை D) காஞ்சி

90. பொருத்துக.

| சிறப்புத் தொடர் | நூல்கள் |
|---|---|
| a) தமிழ் வேலி | 1. தேவாரம் |
| b) தமிழ்கெழுகூடல் | 2. திருவாசகம் |
| c) கூடலில் ஆய்ந்த ஒண்தீந்தமிழ் | 3. பரிபாடல் |
| d) பண்ணொடு தமிழொப்பாய் | 4. புறநானூறு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 1 | 4 |
| B) | 1 | 2 | 3 | 4 |
| C) | 3 | 4 | 1 | 2 |
| D) | 3 | 4 | 2 | 1 |

91. பொருத்துக.

| *சிறப்புப் பெயர்கள்* | *ஆசிரியர்கள்* |
|---|---|
| a) நாடகத்தலைமையாசிரியர் | 1. அ. பம்மல் சம்பந்த முதலியார் |
| b) தமிழ்நாடகத்தின் தந்தை | 2. ஆ. சங்கரதாஸ் சுவாமிகள் |
| c) தத்துவப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர் | 3. தெ.பொ. கிருஷ்ணசாமிப் பாவலர் |
| d) புரட்சியான நாகடங்களை எழுதி சுதந்திர உணர்ச்சியைப் பெருக்கியவர் | 4. மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 3 | 2 | 1 | 4 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 4 | 3 | 2 | 1 |
| D) | 1 | 2 | 3 | 4 |

92. தொடரும் - தொடர்பும்

| *தொடர்* | *சான்றோர்* |
|---|---|
| a) புரைதீர் நல்லறம் போற்றிக் கேண்பின் | 1. பாரதிதாசன் |
| b) தமிழ்நாட்டின் இரசூல் கம்சதோவ் | 2. சீத்தலைச் சாத்தனார் |
| c) என் கடன் பணி செய்து கிடப்பதே | 3. ஔவையார் |
| d) அணுவைத் துறைத்தேழ் கடலைப் புகட்டி | 4. திருநாவுக்கரசர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 3 | 4 | 2 | 1 |
| D) | 4 | 3 | 1 | 2 |

We Shine Academy™

93. விடை தேர்க.
'ஓங்கு' என்னும் அடைமொழியால் குறிக்கப்படும் நூல் எது?
A) புறநானூறு B) கலித்தொகை
C) திருக்குறள் D) பரிபாடல்

94. விடை தேர்க.
இந்நூல் 'ஒத்த' என்னும் அடைமொழி பெற்று வரும்
A) நற்றிணை B) பதிற்றுப்பத்து
C) குறுந்தொகை D) பரிபாடல்

95. பிரித்தறிதலில் சரியான விடையைத் தேர்க.
நீணிலம்
A) நீண்ட + நிலம் B) நீ + நிலம்
C) நீள் + நிலம் D) நீண் + நிலம்

96. பிரித்தலில் எது சரியானது என அறிக.
தீந்தமிழ்
A) தீ + தமிழ் B) தீமை + தமிழ்
C) தீம் + தமிழ் D) தீன் + தமிழ்

97. சிற்றிலக்கியத்திற்குப் பொருந்தாத நூலைக் காண்க.
A) பதிகம் B) நீலகேசி
C) ஊசல் D) சதகம்

98. நூற்றேழு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்
A) புறநானூறு B) நாலடியார்
C) வாயுறை வாழ்த்து D) சதகம்

99. பொருத்தி தொடரைக் குறிப்பிடுக.

| *பட்டியல் I* | *பட்டியல் II* |
|---|---|
| a) ஓதலில் சிறந்தன் (று) | 1. மெய்பிணி இன்மை |
| b) வண்மையில் சிறந்தன்று | 2. வாய்மையுடைமை |
| c) மேதையில் சிறந்தன்று | 3. ஒழுக்கமுடைமை |
| d) இளமையில் சிறந்தன்று | 4. கற்றது மறவாமை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 1 | 4 |
| B) | 3 | 2 | 4 | 1 |
| C) | 1 | 2 | 3 | 4 |
| D) | 4 | 3 | 2 | 1 |

100. காரியாசன் .......... ஒரு சாலை மாணாக்கராவர்.
A) மதுரைக் கூடலூர் கிழார் B) கணிமேதாவியார்
C) நல்லாதனார் D) திருவள்ளுவர்

101. கீழே உள்ள படத்தில் எத்தனை முக்கோணங்கள் உள்ளன?



A) 12 B) 13 C) 14 D) 15

102. $g^m = 32$, எனில் m ன் மதிப்பு
A) $\frac{3}{5}$ B) $\frac{2}{5}$ C) $\frac{5}{3}$ D) $\frac{5}{2}$

103. கொடுக்கப்பட்ட படங்களிலிருந்து விடுபட்ட எண்




A) 6 B) 8 C) 12 D) 20

104. கீழ்க்காணும் விடைகளில் எதைத் தேர்ந்தெடுத்து காலியான இடத்தில் பொருத்தினால் படம் முழுமை அடையும்.




105. கொடுக்கப்பட்டுள்ள பகடையில் 1க்கு எதிரே உள்ள எண்




A) 3 B) 4 C) 5 D) 6

106. கீழே கொடுக்கப்பட்டுள்ள படம் முழுமை அடைய கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் சரியான விடையை தேர்ந்தெடுத்து காலியான இடத்தில் பொருத்தவும்.




We Shine Academy

107. ஐ.நா. சபையால், ஐ.நா. பொது சேவை தினமாக அமர்த்தப்பட்ட தினம்

A) ஜூன் 23ஆம் நாள்
B) அக்டோபர் 24ஆம் நாள்
C) மே 25ஆம் நாள்
D) ஏப்ரல் 27ஆம் நாள்

108. நாடுகளுடன் அதன் தேசிய சின்னங்களை கீழ்கண்ட குறியீடுகளின் மூலமாக பொருத்துக.

| *நாடுகள்* | *சின்னம்* |
|---|---|
| a) பங்களாதேஷ் | 1. சோள பூ |
| b) டென்மார்க் | 2. பருந்து |
| c) ஜெர்மனி | 3. தங்க கம்பி |
| d) அமெரிக்கா | 4. நீர் அல்லி |
| e) சிரியா | 4. கடற்கரை |

| | (a) | (b) | (c) | (d) | (e) |
|---|---|---|---|---|---|
| A) | 4 | 1 | 2 | 3 | 5 |
| B) | 5 | 4 | 3 | 1 | 2 |
| C) | 1 | 2 | 3 | 4 | 5 |
| D) | 4 | 5 | 1 | 3 | 2 |

109. ஜூன் 2013இல் சீனாவால் வெளியிடப்பட்ட உலகின் அதிவேக மீக்கணினி

A) டைடன்-2
B) ஐ.ஐ.டி.எம்
C) சி-டேக்
D) டியன்ஹே-2

110. கீழ்கண்டவற்றுள் எது சரியாக பொருந்துகிறது.

| *பட்டியல் I* | *பட்டியல் II* |
|---|---|
| a) இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் (ISRO) | கோட்டா |
| b) இந்திய அறிவியல் கழகம் | அகமதாபாத் |
| c) இந்திய இயற்பியல் ஆய்வகம் | மும்பை |
| d) இந்திய விண்வெளி ஆராய்ச்சி கழகம் | திருவனந்தபுரம் |

A) (i) மட்டும்
B) (ii) மட்டும்
C) (iii) மட்டும்
D) (iv) மட்டும்

111. *துணிபு (A)* : மானோகுளோனல் எதிர்ப்புப் பொருட்கள் என்பவை குளோன் செல்களால் உருவாக்கப்பட்ட எதிர்ப்பு பொருட்கள் ஆகும்.

*காரணம் (R)* : இவை வைரஸ் நோய்களை குணப் படுத்தப் பயன்படுகின்றன.

A) (A) தவறு (R) சரி
B) (A) மற்றும் (R) தவறு
C) (A) மற்றும் (R) சரி
D) (A) சரி (R) தவறு

112. தேசிய [illegible] சுகாதார மிஷனினால், தொடங்கப் பட்ட ஜனனி சுரக்ஷா யோஜனா (JSY) திட்டத்தின் நோக்கமானது

A) அனைத்து கருவுற்ற தாய்மார்களும், பொது சுகாதார நிறுவனங்களில், செலவில்லாத, இலவசமான (சிசரேரியன் உட்பட) பிரசவ உதவியினை பெறத் தகுதியுடையவராவார்.
B) பிறந்த குழந்தையின் நலம் பேணுவதற்கு, சுகாதார பணியாளர்களுக்கு அடிப்படை பயிற்சியளித்தல்
C) மருத்துவமனைகளில், கருவுற்ற ஏழை தாய்மார்கள் பிரசவத்தினை மேற்கொள்ளச் செய்தல்
D) இந்தியாவில் 0-3 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் காணும் போலியோ நோயினை முற்றிலும் நீக்குதல்

113. கீழ்க்கண்டவற்றுள் இஸ்ரோவின் விண்வெளி ராக்கெட் ஏவுதளங்கள் எவை?

1. தும்பா
2. ஸ்ரீஹரிகோட்டா
3. மகேந்திரகிரி
4. பெங்களூர்

A) 1 மற்றும் 2
B) 1 மற்றும் 3
C) 2 மற்றும் 3
D) 2 மற்றும் 4

114. மார்ச் 2013ல், உலகின் மிகப் பெரிய உயிர் வாயு உற்பத்தி நிலையம் எங்கு நிறுவப்பட்டது?

A) அமெரிக்கா
B) அயர்லாந்து
C) பின்லாந்து
D) ஜெர்மனி

115. தகவல் தொடர்பில் பயன்படும் 'VoIP' எனும் சுருக்கப் பெயர் குறிப்பது

A) Video Over Internet Protocol
B) Voice Over Internet Protocol
C) Video Over Interphase
D) Venue On Internet Pathway

116. 'இராஜா, இராணி, ரோரர், ராக்கெட்' எனும் நான்கன் குழு இதனைக் குறிக்கும்.

A) இந்திய ஏவுகணைகளின் பெயர்கள்
B) ஷராவதி நதியில் உள்ள நீரோடை மற்றும் அருவிகளின் பெயர்கள்
C) சதுரங்கத்தோடு தொடர்புடைய சொற்கள்
D) கல்பாக்கத்திலுள்ள திறன் வினைக்கலங்களின் பெயர்கள்

117. டாக்டர் விஸ்வேஸ்வரய்யா அருங்காட்சியகம் உள்ள இடம்

A) ஹைதராபாத்
B) பெங்களூரு
C) மைசூர்
D) பூனா

We Shine Academy™

118. உலக சுகாதார இயக்கம் இயங்கும் தலைமையிடம் அமைந்த இடம்

A) நியூயார்க் B) லண்டன்
C) ஜெனிவா D) மாஸ்கோ

119. பட்டியல் Iஐ பட்டியல் IIஉடன் பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.

| *பட்டியல் I* | *பட்டியல் II* |
|---|---|
| a) அசாம் | 1. ஓனம் |
| b) குஜராத் | 2. மோபின் |
| c) அருணாச்சல பிரதேசம் | 3. பிகு |
| d) கேரளா | 4. மகர சங்கராந்தி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 2 | 1 | 3 | 4 |
| B) | 3 | 4 | 2 | 1 |
| C) | 4 | 2 | 3 | 1 |
| D) | 1 | 4 | 3 | 2 |

120. வெள்ளிப் புரட்சி என்பதை எதைக் குறிக்கிறது?

A) பால் உற்பத்தி B) முட்டை உற்பத்தி
C) அரிசி உற்பத்தி D) பருத்தி உற்பத்தி

121. இந்திய தொல்லியலின் தந்தை என்றழைக்கப் பட்டவர் யார்?

A) ஜான் மார்ஷல்
B) எஸ்.ஆர். ராவ்
C) ஆர்.எஸ். பிஸ்ட்
D) அலெக்ஸாண்டர் கன்னிங்ஹாம்

122. குப்தர் காலத்தைப் பற்றிய கூற்றுகளை கவனி. சரியானவற்றை தேர்ந்தெடு.

1. அலகாபாத் தூண் கல்வெட்டு இரண்டாம் சந்திரகுப்தரைப் பற்றிய தகவல்களைத் தருகின்றது.
2. மெஹ்ராலி இரும்புத் தூண் கல்வெட்டு முதலாம் சந்திரகுப்தரின் படையெடுப்புகளைக் குறிப்பிடுகிறது.
3. சமுத்திர குப்தரின் வெள்ளி, தங்க நாணய வெளியீடு அவரை அஸ்வமேத யாகத்தை காத்தவர் எனக் காட்டியது.
4. இரண்டாம் சந்திரகுப்தர் தன்னை விக்ரமாதித்தன் என்று அழைத்துக் கொண்டார்.

A) 2, 3 மற்றும் 4 B) 1, 2 மற்றும் 3
C) 1, 3 மற்றும் 4 D) அனைத்தும் சரி

123. தாரிக்-இ-முபாரக்-ஷாகியின் ஆசிரியர் யார்?

A) ஹாசன் உன் நிசாமி B) பக்ருதீன்
C) அமீர் குஸ்ரு D) அமீர் ஹாசன்

124. "நான் நீதிக்கு புறம்பான குற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வேனாயின் எனக்கு எதிரான தீர்ப்பை நானே வழங்கிக் கொள்வேன்" இது யாருடைய கூற்று?

A) பாபர் B) அக்பர்
C) ஜஹாங்கீர் D) அவுரங்கசீப்

125. பொருத்துக :

| | |
|---|---|
| a) பாபர் | 1. புலன் தர்வாசா |
| b) ஹுமாயூன் | 2. காபூல் பாக் |
| c) அக்பர் | 3. திவானி காஸ் |
| d) ஷாஜஹான் | 4. தின்பனா |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 2 | 4 | 1 | 3 |
| B) | 2 | 1 | 3 | 4 |
| C) | 4 | 3 | 2 | 1 |
| D) | 3 | 2 | 4 | 1 |

126. கால வரிசைப்படுத்துக :

1. முதலாம் தரைனின் போர்
2. சிந்துவின் மீது அரேபிய படையெடுப்பு
3. கஜனி மாமூதுவின் சோமநாதபுர படையெடுப்பு
4. டெல்லியில் அடிமை வம்ச ஆட்சி நிறுவப்படுதல்

A) 2, 3, 1, 4 B) 1, 2, 3, 4
C) 3, 2, 1, 4 D) 4, 1, 3, 2

127. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானது எது?

*கருத்துக்கள் :*

A) சிவாஜி பட்டம் சூடிய ஆண்டு, 1674
B) புரந்தர் உடன்படிக்கை, 1664
C) சிவாஜி பிறந்த ஆண்டு, 1637
D) சிவாஜி இறந்த ஆண்டு, 1666

128. 1948-ல் முதலாவது மொழிவாரி மாகாண ஆணையத் தலைவர் ________

A) சீதாராமையா B) பசல் அலி
C) எஸ்.கே. தார் D) ம.பொ. சிவஞானம்

129. பொருத்துக :

| | |
|---|---|
| a) சோழீஸ்வரர் கோயில் | I. குலோத்துங்கன் – I |
| b) கோரங்கநாதன் கோயில் | II. ஆதித்யன் – I |
| c) பாலசுப்பிரமணியம் கோயில் | III. பாராந்தகன் – I |
| d) கம்பாஹரீஸ்வர கோயில் | IV. விஜயாலயன் – I |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | I | II | III | IV |
| B) | III | IV | I | II |
| C) | IV | III | II | I |
| D) | II | I | IV | III |

We Shine Academy ™

130. வரிசை I மற்றும் வரிசை II ஆகியவைகளை பொருத்தி, சரியான தெரிவினை தேர்வு செய்க :

| *வரிசை I* | *வரிசை II* |
|---|---|
| a) சுவாசித்தல் | 1. குளோரோபிளாஸ்ட் |
| b) புரதச் சேர்க்கை | 2. மைட்டோகான்ட்ரியான் |
| c) ஒளிச்சேர்க்கை | 3. டிக்டியோசோம் |
| d) சுரத்தல் | 4. ரைபோசோம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 2 | 4 |
| B) | 4 | 2 | 3 | 1 |
| C) | 3 | 1 | 4 | 2 |
| D) | 2 | 4 | 1 | 3 |

131. மகசூலை அதிகரிக்க, பாக்டீரியாவிலிருந்து எடுக்கப்பட்டு, பயறு அல்லாத தாவரங்களில் செலுத்தப்படும் ஜீன் எது?

A) $T_2$ ஜீன் B) $B_2$ ஜீன்

C) நிஃப் ஜீன் D) உணர்தடை ஜீன்

132. கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒன்றின் பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடு :

1. காசநோய் 2. தொழுநோய்

3. காலரா 4. போலியோ

A) 4 B) 2

C) 1 D) 3

133. பின்வருவனவற்றுள் எது சரியான வாக்கியம்? ATP மூலக்கூறில் அடங்கியுள்ளவை

A) அடினைன், ரிபோஸ் சர்க்கரை மற்றும் இரண்டு பாஸ்பேட் தொகுப்பு

B) அடினைன், டிஆக்ஸிரிபோஸ் சர்க்கரை மற்றும் மூன்று பாஸ்பேட் தொகுப்பு

C) தையமின், ரிபோஸ் சர்க்கரை மற்றும் மூன்று பாஸ்பேட் தொகுப்பு

D) அடினைன், ரிபோஸ் சர்க்கரை மற்றும் மூன்று பாஸ்பேட் தொகுப்பு

134. இதய இயக்கத் தூண்டல் தோன்றல் மற்றும் பரவுதலில் செயல்படும் அமைப்புகள் -

1. ஏட்ரியோ வென்ட்ரிகுலார் கணு
2. சைனு ஆரிக்குலார் கணு
3. புர்கின்ஜி இழைகள்
4. ஹிஸ்சின் கற்றை

இதய இயக்கம் கடத்தப்படும் சரியான படிநிலைகள் -

A) 1, 3, 4, 2 B) 2, 1, 4, 3

C) 3, 2, 1, 4 D) 4, 3, 1, 2

135. கீழ்கண்ட வாக்கியங்களைக் கவனி :

*கூற்று (A)* : லியூட்டியல் நிலையின் இறுதியில் மாதவிடாய் ஏற்படுகிறது.

*காரணம் (R)* : புரோஜெஸ்டிரான் மற்றும் ஈஸ்ட்ரோகன் ஹார்மோன்களின் சுரப்பு குறைவதனால் மாதவிடாய் ஏற்படுகிறது.

*கீழே குறிப்பிட்டுள்ள குறியீட்டில் சரியான விடையைத் தேர்ந்தெடு :*

A) (A) மற்றும் (R) இரண்டும் தவறு, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல

B) (A) சரி ஆனால் (R) தவறு

C) (A) தவறு ஆனால் (R) சரி

D) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்

136. சூழ்நிலை மண்டலத்தில் ஆற்றல் ஒழுக்கின்படி கீழ்கண்டவற்றை வரிசைபடுத்து :

1. உற்பத்தியாளர்
2. உயரிய விலங்கு உண்ணிகள்
3. தாவர உண்ணிகள்
4. விலங்கு உண்ணிகள்

A) 1, 3, 4, 2 B) 3, 4, 2, 1

C) 4, 3, 1, 2 D) 2, 1, 3, 4

137. சரியாக சமைக்கப்படாத மீஸ்லி பன்றி இறைச்சியை உண்பதால் ஏற்படும் நோய்கள் யாவை?

I. லீஸ்மேனியாசிஸ் II. சிஸ்டிசர்கோசிஸ்

III. அஸ்காரிஸ் IV. டீனியாசிஸ்

A) I மற்றும் II B) II மற்றும் IV

C) I மற்றும் III D) III மற்றும் IV

138. வரிசை I & IIஐ பொருத்தி கீழ்கண்டவற்றுள் சரியான விடையை தேர்ந்தெடு :

| *வரிசை I* | *வரிசை II* |
|---|---|
| a) சிட்ரிக் அமிலம் | 1. இரப்பை நீர் |
| b) டார்டாரிக் அமிலம் | 2. தேநீர் |
| c) ஹைட்ரோகுளோரிக் அமிலம் | 3. எலுமிச்சை பழச்சாறு |
| d) டானிக் அமிலம் | 4. திராட்சை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 3 | 1 | 2 | 4 |
| B) | 2 | 3 | 4 | 1 |
| C) | 1 | 2 | 3 | 4 |
| D) | 3 | 4 | 1 | 2 |

WeShine Academy ™

139. வரிசை I & IIஐ பொருத்தி கீழ்கண்டவற்றுள் சரியான விடையை தேர்ந்தெடு :

| *பட்டியல் I* | *பட்டியல் II* |
|---|---|
| a) சலவைத்தூள் | 1. பூச்சிக்கொல்லி |
| b) பாரிஸ் சாந்து | 2. கிருமிநாசினி |
| c) DDT | 3. குடிநீரை தூய்மைப் படுத்துதல் |
| d) பொட்டாஷ் படிகாரம் | 4. முறிந்த எலும்பை ஒட்ட வைத்தல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 4 | 3 |
| B) | 2 | 4 | 1 | 3 |
| C) | 3 | 1 | 2 | 4 |
| D) | 4 | 3 | 2 | 1 |

140. உரங்கள் தொடர்புடைய கீழ்கண்ட வாக்கியங்களை படிக்கவும்.

I. நைட்ரஜன், தாவரங்களின் வேகமான வளர்ச்சிக்கு அவசியமானதாகும்.

II. தாவரங்களின் துரித வளர்ச்சிக்கும் முதிர்ச்சிக்கும் பாஸ்பேட் தேவை.

III. வலிமையான வேர் அமைப்பை பொட்டாசியம் உருவாக்குகிறது.

மேற்கண்ட எந்த வாக்கியம்/வாக்கியங்கள் சரி?

A) I மற்றும் II  B) I, II மற்றும் III

C) I மற்றும் III  D) I மட்டும்

141. பட்டியல் Iஐ பட்டியல் IIஉடன் பொருத்தி சரியான விடையை தேர்ந்தெடு :

| *பட்டியல் I* | *பட்டியல் II* |
|---|---|
| a) கண்ணாடி அரித்தல் | 1. ஜிங்க் கார்பனேட் |
| b) காலிகோ அச்சிடுதல் | 2. போர்டாக்ஸ் கலவை |
| c) தோல் களிம்பு | 3. ஹைட்ரோ ப்ளூரிக் அமிலம் |
| d) காளான் கொல்லி | 4. பொட்டாசியம் டைகுரோமேட் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 3 | 4 | 1 | 2 |
| B) | 1 | 3 | 4 | 2 |
| C) | 2 | 1 | 3 | 4 |
| D) | 4 | 2 | 1 | 3 |

142. பட்டியல் Iஐ பட்டியல் IIஉடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையை தேர்ந்தெடுக்கவும் :

| *பட்டியல் I* | *பட்டியல் II* |
|---|---|
| a) நியூட்டன் | 1. கோள்களின் நீள்வட்டப் பாதையின் இயக்கம் |
| b) ஜோஹனாஸ் கெப்ளர் | 2. புவியின் நிறை |
| c) காவண்டிஷ் | 3. சூரியமையக் கோட்பாடு |
| d) கோபர்நிகஸ் | 4. புவியீர்ப்பு விதி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 4 | 1 | 2 | 3 |
| C) | 4 | 3 | 2 | 1 |
| D) | 3 | 2 | 1 | 4 |

143. I. மையவிலக்கு விசை என்பது மையத்தை நோக்கி செயல்படும் விசையாகும்.

II. தயிர் கடையப்படும் போது வெண்ணெய் பிரித்தெடுக்கப்படுவது மையவிலக்கு விசையால்தான்.

A) கூற்று I சரி ஆனால் கூற்று II தவறு

B) கூற்று ஒன்றோ இரண்டோ சரியல்ல

C) கூற்று I தவறு மற்றும் கூற்று II சரி

D) கூற்று ஒன்றோ இரண்டோ தவறல்ல

144. உருகு இழை

a) அதிக மின்தடையும் குறைந்த உருகு நிலையும் கொண்டது

b) குறைந்த மின்தடையும் குறைந்த உருகு நிலையும் கொண்டது

c) அதிக மின்தடையும் அதிக உருகுநிலையும் கொண்டது

d) குறைந்த மின்தடையும் அதிக உருகுநிலையும் கொண்டது

A) a சரி  B) b சரி

C) c சரி  D) d சரி

145. செல்சியஸ் வெப்பநிலை அளவுகோளில் அமையப் பெறும் வெப்பநிலையில் $\frac{11}{5}$ யின் பெருக்கு மதிப்பிற்குச் சமமான ஃபாரன்ஹீட் வெப்பநிலை மதிப்பைத் தரும், வெப்பநிலை (செல்சியஸில்)

A) 0°C  B) 40°C

C) 80°C  D) –40°C

146. பின்வருவனவற்றை பொருத்துக :

| | |
|---|---|
| a) கான்கார்ட் விமானம் | 1. இலண்டன் முதல் பாரிஸ் |
| b) கடலடிக் குடைவு வழி | 2. சென்னை முதல் மைசூர் |
| c) டி.ஜி.வி. | 3. இலண்டன் முதல் நியூயார்க் |
| d) சதாப்தி | 4. பாரிஸ் முதல் லையான்ஸ் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 1 | 2 |
| B) | 3 | 2 | 4 | 1 |
| C) | 2 | 4 | 1 | 3 |
| D) | 1 | 2 | 3 | 4 |

We Shine Academy ™

147. சரியான விடையை குறியிடுக :
காலநிலையை குறிக்கும் 'கிலிமா' என்ற சொல் எந்த மொழியிலிருந்து பெறப்பட்டது?

I. பெர்சியன் II. ஆங்கிலம்
III. கிரேக்கம் IV. லத்தீன்

A) II மட்டும் சரி B) IV மற்றும் II சரி
C) III மட்டும் சரி D) IV மட்டும் சரி

148. "டைகா" தாவரங்களின் வளர்ச்சி காலம்

A) 150 நாட்கள் B) 120 நாட்கள்
C) 110 நாட்கள் D) 130 நாட்கள்

149. பட்டியல் Iஐ பட்டியல் II உடன் பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையை தேர்ந்தெடு :

| *பட்டியல் I* | *பட்டியல் II* |
|---|---|
| a) சின்னூக் | 1. வடக்கு இத்தாலி |
| b) ஸ்பான் | 2. இந்தியாவின் தார் பாலைவனம் |
| c) சிராக்கோ | 3. அமெரிக்க ஐக்கிய நாடு |
| d) லூ | 4. சகாரா பாலைவனம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 2 | 4 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 3 | 1 | 4 | 2 |
| D) | 4 | 3 | 2 | 1 |

150. பட்டியல் Iஐ பட்டியல் IIஉடன் பொருத்தி சரியான விடையை தேர்ந்தெடு :

| *பட்டியல் I*<br>*கோள்* | *பட்டியல் II*<br>*சூரியனைச் சுழன்றவாறு சுற்றிவரும் காலம்* |
|---|---|
| a) புதன் | 1. 687 நாட்கள் |
| b) வெள்ளி | 2. 87.97 நாட்கள் |
| c) பூமி | 3. 224.7 நாட்கள் |
| d) செவ்வாய் | 4. 365¼ நாட்கள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 4 | 3 | 2 | 1 |
| C) | 2 | 3 | 4 | 1 |
| D) | 4 | 3 | 1 | 2 |

151. சரியான விடையைத் தேர்ந்தெடு - இது



A) புயலின் கண் B) புவியின் குறியீடு
C) காற்று மோதும் பக்கம் D) உள்ளே வரும் காற்று

152. சரியான வாக்கியத்தை தேர்ந்தெடு :

A) அந்தமான் தீவுக்கும் தாய்வானுக்கும் இடையில் உள்ள டகல் அந்தமான் கடல்
B) அந்தமான் தீவுக்கும் தாய்லாந்துக்கும் இடையில் உள்ள கடல் அந்தமான் கடல்
C) அந்தமான் தீவுக்கும் காம்போடியாவுக்கும் இடையில் உள்ள கடல் அந்தமான் கடல்
D) அந்தமான் தீவுக்கும் மலேசியாவிற்கும் இடையில் உள்ள கடல் அந்தமான் கடல்

153. சரியான விடையை தேர்ந்தெடு :
பொருளாதார வளர்ச்சி நிலைக்கு முன்னேற ஐந்து வகையான கட்டங்களை விளக்கியுள்ளவர்

A) மால்தசு B) ஆல்ஃபிரடு மார்ஷல்
C) ரோஸ்டோவ் D) இலயனல் ராபின்ஸ்

154. ஹிந்தி மொழி மூலம் "அனைவரும் ஒருவரே" என்ற உணர்வை ஏற்படுத்திய சமூக சீர்திருத்தவாதி யார்?

A) இராஜாராம் மோகன்ராய்
B) சுவாமி தயானந்த சரஸ்வதி
C) ஸ்ரீராம் கிருஷ்ணா
D) மேடம் பிளவாட்ஸ்கி

155. எந்த இதழ்கள் அதன் ஆசிரியரோடு சரியாக பொருந்தவில்லை?

A) வந்தே மாதரம் : அரவிந்தோ கோஷ்
B) நியூ இந்தியா : பிபின் சந்திரபால்
C) யுகந்தர் : பூபேந்தர்நாத் தத்தா
D) சந்தியா : பரிந்திரா கோஷ்

156. "நான் ஒரு இந்திய டமாரம்" என்று கூறியவர்

A) மேடம் காமா B) சகோதரி நிவேதிதா
C) அன்னி பெசன்ட் D) காதம்பினி கங்குலி

157. 1931-ஆம் ஆண்டு கராச்சியில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டுக்கு தலைமை தாங்கியவர்

A) ஜவஹர்லால் நேரு B) மகாத்மா காந்தி
C) இராஜாஜி D) வல்லபாய் படேல்

158. கீழ்கண்டவற்றுள் கிரிப்ஸ் தூதுக்குழுவின் பரிந்துரை எது?

A) அரசியல் நிர்ணய சபை அமைக்க திட்டம்
B) மத்தியில் இரட்டை ஆட்சி அறிமுகப்படுத்தல்
C) பாகிஸ்தான் தனி நாடு கோரிக்கையை ஆதரித்தல்
D) இந்தியர்களுக்கு இராணுவத்தை கட்டுப்படுத்த உரிமை

We Shine Academy

159. "உங்கள் இரத்தத்தை கொடுங்கள்; நான் சுதந்திரத்தை கொடுக்கிறேன்" என்று சொன்னவர் யார்?

A) பால கங்காதர திலகர் B) லாலா லஜ்பத் ராய்

C) பிபின் சந்திரபால் D) சுபாஸ் சந்திரபோஸ்

160. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்துக :

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| 1) மௌலானா அபுல் கலாம் ஆசாத் | a) கேசரி |
| 2) அம்பேத்கார் | b) தத்வபோதினி பத்திரிக்கை |
| 3) தேவேந்திரநாத் தாகூர் | c) அல் ஹிலால் |
| 4) பால கங்காதர திலகர் | d) மூக்நாயக் |

| | (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|
| A) | (c) | (d) | (b) | (a) |
| B) | (b) | (c) | (d) | (a) |
| C) | (a) | (b) | (c) | (d) |
| D) | (d) | (a) | (c) | (b) |

161. தாஷ்கண்ட் அமைதி மாநாடு எப்போது நடைபெற்றது?

A) ஜனவரி 1966 B) பிப்ரவரி 1966

C) மார்ச் 1966 D) ஏப்ரல் 1966

162. காமராஜரின் பிரபலமான கொள்கை

A) 'எஸ்' திட்டம் B) 'எல்' திட்டம்

C) 'கே' திட்டம் D) 'ஜெ' திட்டம்

163. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனிக்கவும் :

*கூற்று (A)* : இந்திய அரசியலமைப்பு தொடக்கத்தில் ஏழு அடிப்படை உரிமைகளைக் கொண்டிருந்தது. தற்போது ஆறு அடிப்படை உரிமைகள் தான் உள்ளன.

*காரணம் (R)* : 1978-ல் 44வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின்படி, சொத்துரிமையானது அடிப்படை உரிமையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டு விட்டது.

*சரியான விடையைத் தேர்ந்தெடுக்க :*

A) கூற்று மற்றும் காரணம் சரி, கூற்றுக்கான காரணம் சரி

B) கூற்று மற்றும் காரணம் சரி கூற்றுக்கான காரணம் தவறு

C) கூற்று சரி, காரணம் தவறு

D) கூற்று தவறு, காரணம் சரி

164. பொருத்துக :

| | |
|---|---|
| a) குடியரசுத் தலைவர் | 1. மாநிலத்தின் உண்மையான தலைவர் |
| b) பிரதம அமைச்சர் | 2. இந்தியாவின் முதல் குடிமகன் |
| c) முதலமைச்சர் | 3. மாநிலத்தின் பெயரளவுத் தலைவர் |
| d) ஆளுநர் | 4. இந்திய அரசாங்கத்தின் தலைவர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 2 | 4 | 1 | 3 |
| C) | 2 | 1 | 3 | 4 |
| D) | 4 | 2 | 3 | 1 |

165. பட்டியல் Iஐ பட்டியல் II உடன் பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| *பட்டியல் I* | *பட்டியல் II* |
|---|---|
| a) அடிப்படை கடமைகள் | 1. பகுதி IV |
| b) அரசு நெறிமுறைப் படுத்தும் கோட்பாடுகள் | 2. பகுதி IV-அ |
| c) கிராம பஞ்சாயத்து | 3. பகுதி IX-அ |
| d) நகர்புற உள்ளாட்சி | 4. பகுதி IX |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 3 | 4 | 2 | 1 |
| D) | 4 | 1 | 2 | 3 |

166. பொருத்துக :

| *பட்டியல் I* | *பட்டியல் II* |
|---|---|
| a) தேசிய மக்கள் தொகைக் கொள்கை | 1. 1991 |
| b) புதிய விவசாயக் கொள்கை | 2. 1950 |
| c) புதிய தொழில் கொள்கை | 3. பிப்ரவரி 2000 |
| d) திட்ட ஆணையம் | 4. ஜூலை 2000 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 1 | 4 | 2 | 3 |
| B) | 3 | 1 | 2 | 4 |
| C) | 4 | 3 | 1 | 2 |
| D) | 3 | 4 | 1 | 2 |

167. மனிதனின் இருதயமும் உயிர்சக்தியும் என கருதப்படும் விதி யாது?

A) விதி 46 B) விதி 42

C) விதி 32 D) விதி 35

WeShine Academy™

168. பொருத்துக :

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| a) தேசிய நெருக்கடி நிலை | 1. அங்கம் 360 |
| b) மாநில நெருக்கடி நிலை | 2. அங்கம் 352 |
| c) நிதி நெருக்கடி நிலை | 3. அங்கம் 356 |

| | (a) | (b) | (c) |
|---|---|---|---|
| A) | 3 | 2 | 1 |
| B) | 2 | 3 | 1 |
| C) | 2 | 1 | 3 |
| D) | 3 | 1 | 2 |

169. *கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனிக்கவும் :*
I. மாநில நிர்வாகத்தின் நரம்பு மண்டலமாக செயலகம் உள்ளது
II. இந்திய நிர்வாகத்தின் அடிப்படை அலகாக மாவட்டம் உள்ளது
III. மாவட்ட நிர்வாகத்தின் தலைவராக மாவட்ட ஆட்சியாளர் உள்ளார்
IV. மாநில நிர்வாகத்தின் தலைவராக ஆளுநர் உள்ளார்
*இவற்றுள் எது தவறு ?*
A) III மட்டும் தவறு B) IV மட்டும் தவறு
C) I மற்றும் II தவறு D) III மற்றும் IV தவறு

170. *சரியான விடையைத் தேர்ந்தெடு :*
I. இந்திய அரசியலமைப்பு, எழுதப்பட்ட அரசியலமைப்பு
II. இந்திய அரசியலமைப்பு நெகிழும், நெகிழா இயல்புடையது?
III. இந்திய அரசியலமைப்பு மதசார்பற்ற அரசை உடையது
IV. இந்திய அரசியலமைப்பு கூட்டாட்சி முறை அரசுக்கு எதிரானது
A) I மட்டும் சரி
B) II மட்டும் சரி
C) I, II மற்றும் IV மட்டும் சரி
D) I, II மற்றும் III மட்டும் சரி

171. பொருத்துக :

| | |
|---|---|
| a) விதி 153 | 1. தேசிய அவசரநிலை |
| b) விதி 163 | 2. ஆளுநர் |
| c) விதி 352 | 3. மாநில அவரச நிலை |
| d) விதி 356 | 4. முதலமைச்சர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 3 | 2 | 4 | 1 |
| B) | 1 | 3 | 4 | 2 |
| C) | 4 | 3 | 2 | 1 |
| D) | 2 | 4 | 1 | 3 |

173. பின்வருவனவற்றுள் பொருந்தாதை சுட்டிக்காட்டுக.
A) இந்திய ஆயுள் காப்பீட்டு கழகம் (LIC)
B) இந்திய தொழில் நிதிக் கழகம் (IFCI)
C) யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியா (UTI)
D) இந்திய பொதுக் காப்பீட்டுக் கழகம் (GIC)

174. *துணிபு (A)* : 1991 முதல் புதிய பொருளாதாரச் சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப் பட்டதால் நமது திட்டமிடுதலில் நல்ல தரமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.
*காரணம் (R)* : இந்திய திட்டமிடுதலின் மையநோக்கம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதலாகும்.
*கீழே குறிப்பிட்டுள்ள குறியீட்டில் சரியான விடையைத் தேர்ந்தெடு :*
A) (A) மற்றும் (R) சரி B) (A) தவறு (R) சரி
C) (A) மற்றும் (R) தவறு D) (A) சரி (R) தவறு

175. 'புவிசார் குறியீடு' சட்டம் மூலம் தமிழகத்திலிருந்து பதிவு செய்யப்பட்ட முதல் பொருள் யாது?
A) மதுரை மல்லி B) தஞ்சாவூர் வீணை
C) பத்தமடைப் பாய் D) சேலம் சுங்குடிச் சேலை

176. *சரியான விடையைத் தேர்ந்தெடு :*
பிறப்பு வீதத்திற்கும், இறப்பு வீதத்திற்கும் உள்ள உறவை விளக்கும் கோட்பாடு
A) மால்தசின் மக்கள் தொகைக் கோட்பாடு
B) உத்தம அளவுக் கோட்பாடு
C) மக்கள் தொகை வளர்ச்சிக் கட்டக் கோட்பாடு
D) ரோஸ்டோவின் வளர்ச்சி நிலைகள்

177. கீழ்க்கண்டவற்றை சரியாகப் பொருத்துக :

| | |
|---|---|
| a) நில சீர்திருத்தங்கள் | 1. நாட்டு சமூக உதவித்திட்டம் (NSAP) |
| b) ஏப்ரல் 1999 | 2. வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் (EAS) |
| c) ஆகஸ்டு 15, 1995 | 3. ஜவகர்கிராம் வேலைவாய்ப்பு திட்டம் (JGSY) |
| d) அக்டோபர் 2, 1993 | 4. ஜமீன்தார் முறை ஒழிப்புத் திட்டம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 1 | 2 |
| B) | 1 | 4 | 2 | 3 |
| C) | 3 | 2 | 4 | 1 |
| D) | 2 | 1 | 3 | 4 |

178. கீழ்க்கண்ட கூற்றுகளில் எது சரியாக பொருந்த வில்லை ?

| | |
|---|---|
| A) பேராசிரியர் P.C. மகலராபிஸ் | - IIIஆவது ஐந்தாண்டுத் திட்டம் |
| B) மறைமுக வேலையின்மை | - இறுதிநிலை உற்பத்தித் திறன் பூஜ்யம் |
| C) J.K. கீன்ஸ் | - புதிய பொருளியலின் தந்தை |
| D) முதல் திட்டக்குழு தலைவர் | - ஜவகர்லால் நேரு |

We Shine Academy ™

179. செலவிடத் தகுதியான தனிமனித வருமானம் = தனிமனித வருமானம் - ________
A) தனி வரி B) தேய்மானம்
C) மறைமுகவரிகள் D) நிறுவனங்களின் வரி

180. தற்போதைய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் யார்?
A) திரு. Y.V. ரெட்டி B) திரு. ரங்கராஜன்
C) திரு. M.K. நாராயணன் D) திரு. D. சுப்பாராவ்

181. கீழ்வருவனவற்றிலிருந்து பதிலை தேர்ந்தெடுக்கவும். இந்தியப் பொருளாதாரத்தின் அடிப்படை இயல்புகள்
1. வேளாண்மையில் முதன்மைத்துறை
2. தொழில்துறையில் முதன்மை
3. குறைந்த தலா வருமானம்
4. அதிக அளவு வேலையின்மை
A) 1 & 2 மட்டும் B) 1, 2 & 3 மட்டும்
C) 2, 3 & 4 மட்டும் D) 1, 3 & 4 மட்டும்

182. ஒருவரின் மாத வருமானம் ரூபாய் 24000 அவருடைய செலவினமும் சேமிப்பும் படத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. அவர் வாடகைக்கு செலவிடும் தொகை யாது?




A) ரூ. 7,200 B) ரூ. 3,840
C) ரூ. 2,400 D) ரூ. 3,360

183. கீழ் கொடுக்கப்பட்டுள்ள வரைபடத்திலிருந்து 2011 ஆண்டிலிருந்து 2013 வரைக்கான விற்பனை அதிகரிப்பு சதவீதம் ________




A) 15% B) 30% C) 100% D) 200%

184. கீழ்கொடுக்கப்பட்டுள்ள விவரங்களுக்கு ஒரு பை (Pie) வரைபடம் வரைந்தால் கணிதத்திற்கான வட்டக் கோணப்பகுதியின் கோணம் ________ ?

| பாடம் | மாணவர்கள் எண்ணிக்கை |
|---|---|
| பொறியியல் | 440 |
| மருத்துவம் | 220 |
| வேளாண்மை | 160 |
| பொருளியல் | 60 |
| கணிதம் | 80 |

A) 15° B) 30° C) 40° D) 80°

185. $\left(1-\frac{1}{3}\right)\left(1-\frac{1}{4}\right)\left(1-\frac{1}{5}\right)\ldots\left(1-\frac{1}{q}\right)=$

A) $\frac{1-q}{q}$ B) $\frac{2}{q}$ C) $\frac{2}{q}(q-1)$ D) $\frac{2}{q(q+1)}$

186. $\frac{16.12\times16.12\times16.12+13.88\times13.88\times13.88}{16.12\times16.12-16.12\times13.88+13.88\times13.88}=$

A) 16.12 B) 2.24 C) 30 D) 20

187. ஒரு நாற்காலியின் விலை ரூபாய். 2100லிருந்து ரூபாய் 2520 ஆக அதிகரித்துள்ளது எனில் அதிகரித்த விலை சதவீதத்தைக் காண்க.
A) 15% B) 20% C) 10% D) 25%

188. $(x^2-x)$, $(x-1)^2$-ன் மீப்பெரு பொதுக்காரணி
A) $(x-1)$ B) $(x-1)^2$ C) $x^3-x$ D) $x(x-1)$

189. ஒரு சாலையில் உள்ள போக்குவரத்து சிக்னல் விளக்கு 40 வினாடிகளுக்கு ஒரு முறை மாறுகிறது. அடுத்த சந்திப்பில் உள்ள போக்குவரத்து சிக்னல் விளக்கு 32 வினாடிகளுக்கு ஒரு முறை மாறுகிறது. இரண்டு விளக்குகளும் ஒரே நேரத்தில் மாறினால், மீண்டும் அவை இரண்டும் ஒரே நேரத்தில் மாறுவதற்கு எடுத்துக் கொள்ளும் காலம் எவ்வளவு?
A) 160 வினாடி B) 80 வினாடி
C) 300 வினாடி D) 120 வினாடி

190. 48, 60, 64ஆல் வகுபடும் 10,000ஐ விட குறைவான மிகப்பெரிய எண்
A) 9000 B) 9600 C) 4800 D) 960

191. a : b = 4 : 1 எனில் $\sqrt{a/b}+\sqrt{b/a}$ -ன் மதிப்பு
A) $\frac{5}{2}$ B) 4 C) 8 D) $\frac{3}{2}$

192. Aயிலிருந்து ரூ.10 ஐயும், Bலிருந்து ரூ. 15 ஐயும் Cலிருந்து ரூ. 20 ஐயும் கழித்தால், அவர்கள் பெறும் தொகைகளின் விகிதம் 3:4:5 என்று இருக்கும்படி ரூ. 1245ஐப் பிரித்தால், ஒவ்வொருவரும் பெறும் தொகை முறையே
A) ரூ. 415 ; ரூ. 310 ; ரூ. 520
B) ரூ. 310 ; ரூ. 520 ; ரூ. 415
C) ரூ. 415 ; ரூ. 520 ; ரூ. 310
D) ரூ. 310 ; ரூ. 415 ; ரூ. 520

We Shine Academy™

193. விடுபட்ட எண்ணைக் காண்க.

2, 6, 12, 20, 30, ______

A) 56 B) 38 C) 46 D) 42

194. $1+2+3+\dots+n = K$ எனில்

$1^3+2^3+3^3=\dots+n^3$ = ன் மதிப்பு ______

A) $K^2$ B) $K^3$ C) $\frac{K(K+1)}{2}$ D) $(K+1)^3$

195. ஒரு கடிகாரம் ஒரு மணிக்கு ஒரு முறை, இரண்டு மணிக்கு இரு முறை என்ற முறையில் மணி ஒலிக்கிறது எனில் ஒரு நாளில் மொத்தம் எத்தனை முறை மணி ஒலிக்கும்?

A) 78 B) 156 C) 178 D) 256

196. A என்ற நகரத்திலிலுள்ள 5 கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் விவரங்கள் கீழ் உள்ள வரை படத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. நகரம் Aவில் பயிலும் அறிவியல் மாணவர்களில், கல்லூரி 4ல் பயிலும் அறிவியல் மாணவர்களின் சதவீதம் ______?




A) 10% B) 20% C) 30% D) 40%

197. ஒரு தொகையானது தனிவட்டி வீதத்தில் 10 ஆண்டுகளில் இருமடங்கானால் அத்தொகை அதே தனிவட்டி வீதத்தில் மும்மடங்காக எடுத்துக் கொள்ளும் காலம் என்ன?

A) 30 வருடங்கள் B) 15 வருடங்கள்

C) 25 வருடங்கள் D) 20 வருடங்கள்

198. ரூ. 800 ஆனது 5% கூட்டு வட்டி வீதத்தில் ரூ. 882 ஆக எடுத்துக் கொள்ளும் காலம் ______ ஆண்டுகள்.

A) 4 ஆண்டுகள் B) 3 ஆண்டுகள்

C) 2 ஆண்டுகள் D) 1 ஆண்டு

199. 12 ஆண்கள் அல்லது 18 பெண்கள் ஒரு வேலையை 14 நாட்களில் செய்வர் எனில் 8 ஆண்களும் 16 பெண்களும் சேர்ந்து அந்த வேலையை எத்தனை நாட்களில் முடிப்பர்?

A) 10 நாட்கள் B) 9 நாட்கள்

C) 12 நாட்கள் D) 11 நாட்கள்

200. A மற்றும் B என்ற இரண்டு தேர்வறைகளில் A என்ற அறையிலிருந்து 10 மாணவர்கள் Bக்கு அனுப்பப்பட்டால் இரண்டு அறைகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை சமம். Bல் இருந்து 20 மாணவர்கள் A என்ற அறைக்கு அனுப்பப் பட்டால் Aல் உள்ள மாணவர்கள் Bல் உள்ள மாணவர்களைப் போல் இரு மடங்கு எனில் A, B அறைகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை முறையே

A) 100, 80 B) 180, 100

C) 20, 80 D) 120, 100

We Shine Academy TM